www.tamilarangam.net

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT
N NDPT
N NDPT
N NDPT
N NDPT
NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)



NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM

# N. D. P. T.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசபக்தன்

''சிறு துளி பெரு வெள்ளம்'' அன்பளிப்பு 15 உருபா / வெளிநாடு 10 டொலர்

மடல் தொடர்புகளுக்கு மட்டும்


T. ARASAN
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
M 34 2x4
C A N A D A

EDITOR
DESAM
POST BOOKS-256
NYBORG
5871 BERGEN
N O R W A Y

Patriot_editor @ Yahoo.com

www.ndpt.org



RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM (N.D.P.T.)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தமும் பேச்சு வார்த்தையும்

பிரித்தானிய வல்லரசிய கொலனிய ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் எதிரான இலங்கை மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம். பிரித்தானிய ஆளும் வர்க்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிகளால், பேச்சு வார்த்தை, நிர்ப்பந்தம் ஒப்பந்தங்களால் சமரசப்படுத்தப்பட்டு, உலகச் சுரண்டல் அமைப்பின், வல்லரசுகளின் நவகொலனியாக இலங்கை மாற்றப்பட்டது. 50 ஆண்டு கால நவகொலனிய இலங்கையின் வரலாற்றில், சிங்கள ஆளும் வர்க்கத்தின், சிறீலங்கா அரசின், தமிழ்இனப் புறக்கணிப்புக்கும் இனப் பாரபட்சத்துக்கும் எதிரான தமிழ் மக்களின் 50 வருட இன சமத்துவ உரிமைக்கான போராட்டம் பலமுறை பேச்சுவார்த்தைகளை ஒப்பந்தங்களை கண்டிருக்கிறது. அவ் ஒப்பந்தங்கள், ஆட்சியாளர்களாலும், சிங்கள இன, பௌத்த மதவாதிகளாலும் ஒப்பந்த மை காயுமுன் கிளித்தெறியப்பட்டது. எரிக்கப்பட்டுள்ளது. அரசால் மீறப்பட்டு அழிக்கப்பட்டது.

தமிழ் இன ஒடுக்குமுறை இன அழிப்பாக, நில ஆக்கிரமிப்பாக மாறியபோது தமிழ் மக்கள் தமது தேசிய சுயநிர்ணய உரிமையை பாதுகாக்க - வென்றெடுக்க,அரசியல் உரிமையை நிலைநாட்ட ஆயுதப் போராட்டப் பாதையை முன் வைத்தனர். கடந்த 25 வருட ஆயுதப் போராட்ட வழியில் 17 வருட தமிழீழ விடுதலை யுத்தப் பாதையில் பல தடவைகள் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு, அமைதி பற்றி பேசப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறுக்கும் சிறீலங்கா அரசின், ஆக்கிரமிப்பு அரசியல் அம்பலப்பட்டு இருக்கிறது, யுத்தம் தொடர்கிறது.

இந்தியரசு புலிகள் உட்பட தமிழீழப் போராளி களுக்கு 1983-ல் தங்குமிடம், பணம், ஆயுதம், பயிற்சி என அனைத்தும் கொடுத்தது. 1985-இல் இந்திய அரசு ஏற்பாட்டில் UNP தலைமையிலான சிறீலங்கா அரசுக் கும், போராளி இயக்கங்களுக்கும் இடையில் நேரடிப் பேச்சு வார்த்தை பூட்டான் தலைநகர் 'திம்புவில்' நடந்தது. தமிழீழ தரப்பின் ஒற்றுமையால், தெளிவான உறுதியான திம்புக் கோரிக்கை நிலைப்பாடுகளால் சிறீலங்கா அரசின் பொய் முகம் கிழிக்கப்பட்டது. பேச்சு வார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. பின்னர் விடு தலை இயக்கங்களை பிரித்தாளும் இந்தியரசின் நெருக் குதல், சூழ்ச்சிகள் நேரடியாக வெளிப்பட்டது. 1987-இல் '**இந்திய இலங்கை ஒப்பந்தம்**' ஒன்றை அரசுகளே கைச்சாத்திட்டன. தமிழீழ விடுதலை இயக் கங்களை அரசியல் ரீதியாக பிளவுபடுத்தி சமரசப்படுத்தின.

தமிழீழ மக்களின் மேல், போராளிகள் மீது திணிக் கப்பட்ட அரசியல் தீர்வும், ஒப்பந்தமும், புலிகளாலும், புரட்சிகர தேசபக்த தமிழீழ அமைப்புக்களாலும் நிராக ரிக்கப்பட்டது. ஒப்பந்தத்தை அமுல்படுத்த அமைதிப் படை சமாதானப்படை என்ற பெயரில் வந்த இந்திய ஆக்கிரமிப்பு படையின் ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிராக புலிகள் விடுதலை யுத்தத்தை நடத்தினர். இந்திய அரசின் ஆக்கிரமிப்பு அரசியலும் யுத்தமும் தோற்கடிக் கப்பட்டது. சமாதான முகமூடி கிழித்தெறியப்பட்டது. ஆக்கிரமிப்பாளர்களின் சூழ்ச்சிகளை தமிழீழ மக்கள் முறியடித்து வெற்றி பெற்றனர். அதே வேளை தமிழீழ சமூகத்துள், போராளிகள் மத்தியில் ஒரு நீடித்த பிளவை ஏற்படுத்துவதில் எதிரிகள் வெற்றி பெற்றனர்.

போராட்டத்தில் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை என்ற கட்டத்தை தாண்டி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுமா னால் விடுதலைக்காக போராடும் மக்களின் பக்கம் நிற்கும், சக்திகளின் மத்தியில் உள்ள சரணாகதித் தலைமை களும், கொள்கைகளை இலட்சியங்களை கைவிடும் சந்தர்ப்பவாத தலைமைகள் எதிரிகளின் பக்கம் சாய்

www.tamilarangam.net



வதும், போராட்டத்தை காட்டிக் கொடுப்பதும், எதிரிகளின் கைக்கூலிகளாக போராடும் மக்கள் சமுகத்தை பிளப்பதும் வரலாற்றுக்கு புதியல்லவே. ஆனால் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் அரசியல் - இராணுவத் தலைமை இயக்கம் எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பதிலும், துரோகத் தலைமைகளை தனிமைப்படுத்துவதிலும், கீழ் அணிகளையும், அவர்களுக்கு ஆதரவு வழக்கும் மக்களையும் போராட்டத்தின் பக்கம் வென்றெடுப்பதிலும் அரசியல் முதிர்ச்சியும், முன்னேறிய அணுகுமுறையும் வெளிப்படுத்த வேண்டும். புலிகளின் சுத்த இராணுவக் கண்ணோட்டமும், தனி இயக்க சர்வாதிகார அணுகுமுறையும், ஆக்கிரமிப்பாளர்களின் சூழ்ச்சிகளுக்கு கடந்த காலத்தில் வழி சமைத்துக் கொடுத்தது கவனிக்கத்தக்கது. இந்தத் தவறை புலிகளும், புரட்சிகர தேசபக்த அமைப்புக்களும் இனிவரும் காலங்களில் கவனிக்க வேண்டும்.

இந்திய ஆக்கிரமிப்பு படை வெளியேற்றத்தின் பின் 1991-இல் பிரேமதாச தலைமையிலான சிறீலங்கா அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு பேச்சு வார்த்தை நடந்த போதும் அதுவும் வெற்றி பெறவில்லை. 1994-இல் சந்திரிகா தலைமையிலான அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை நடந்த போதும் அதுவும் தோல்வியில் முடிந்தது.

சந்திரிகா தலைமையிலான பொதுசன முன்னணி அரசு எப்படியும் சமாதானத்தை கொண்டு வருவோம் என்ற கொள்கைப் பிரகடனத்துடன் 94இலும், 2000இலும் ஆட்சியை கைப்பற்றியது. 1997-ல் பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் ஒரு 'தீர்வுப் பொதியை' முன் வைத்தது. ஆனால் அது தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளை குறைந்த பட்சம் கூட தீர்க்க கூடியதாக இல்லை. இதனால் பொதுசன முன்னணியில் உள்ள TULF, TELO, PLOT போன்ற தமிழ் கட்சிகளின் கூட தீர்வுப் பொதியை ஏற்க்கவில்லை. சந்திரிகா அரசின் தீர்வுப் பொதியை எதிர்க்கட்சியான UNP, சிங்கள கட்சி (சிறெல உறுமய), JVP போன்றனவும்

www.tamilarangam.net



ஏற்கவில்லை. சிங்கள இன, மதவாதச் சக்திகளையும், தமிழீழ மக்களையும் ஒரே திட்டத்தில் சமரசப்படுத்த முயன்ற சந்திரிகாவின் சாதுரியமான தீர்வுத்திட்ட முயற்சிகள் தோற்றுப் போயுள்ளது. சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் ஆக்கிரமிப்பு யுத்தம் மட்டும் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

யுத்தத்தில் அரசியல் - இராணுவ முன்னேற்றம், தேக்கம், பின்னடைவு ஏற்படும்போது போர் நிறுத்தம் பேச்சு வார்த்தை பற்றி பேசப்படுவதும், நிபந்தனைகள் விதிப்பதும், ஒரு பகுதி ஏற்பதும், மற்றைய பகுதி நிராகரிப்பதும், தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. 1998-இல் சிறீலங்கா அரசின் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையும், 2000-ல் புலிகளின் ஓயாத அலை இராணுவ நடவடிக்கையும் யுத்தத்தில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அரசியல் முன்னேடுப்புக்களிலும் தாக்கத்தை நிகழ்த்தியுள்ளது. சந்திரிகா அரசின் அரசியல் தீர்வுப் பொதி முயற்சியும் - சமாதான யுத்த (?) நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லை. மறுபுறம் சிறீலங்கா அரசை பரிய சமுக பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள்ளும், யுத்த நெருக்கடிக்கும் தள்ளியுள்ளது.

உலக நாடுகள் தலையீடு செய்து, முக்கியமாக சிறீலங்கா அரசு முகங்கொண்டுள்ள நெருக்கடியை தீர்த்து, தங்களின் நவகொலனிய ஆதிக்கத்தையும் ஒழுங்கமைத்துக் கொள்ள முன் வந்துள்ளன. சிறீலங்காவுடன் பூகோள ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், அரசியல் - இராணுவ நலன்களிலும் நேரடியாக உறவு கொண்டுள்ள நாடுகளின் அரசுகள் தலையிடுகின்றன. உலக சமாதான தரகு நாடாக அறியப்பட்டுள்ள நோர்வே அரசு பாலஸ்தீனம் - இஸ்ரேல் பேச்சு வார்த்தையை ஒழுங்கு செய்து 1993-ல் OSLO ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பெருமை வேறு (இன்று OSLO ஒப்பந்தம் என்னவரானது என்பது தனிக்கதை). உலக சமாதான நோபல் பரிசின் நூற்றாண்டு 2001-ல் நோர்வேயில் கொண்டாடப் போகும் வேளையில், இலங்கைப் பிரச்சினையில் புத்தாயிரம் ஆண்டிலிருந்து நோர்வே

www.tamilarangam.net



அரசின் மத்தியஸ்த முயற்சி தொடங்கியுள்ளது. சர்வதேச நாடுகளின் நிர்ப்பந்தம், இராஜதந்திர சூழ்ச்சிகள் மூலம் விடுதலை புலிகள் இயக்கத்தையும், அரசையும் நேரடியாகப் பேச வைத்து ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் சர்வதேச இராஜதந்திர முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. நோர்வே அரசு இதற்கான தலைமைப் பொறுப்பை எடுத்துள்ளது. (கொசவோ தேசிய விடுதலையை அங்கீகரித்த சர்வதேச நாடுகள், யூகோஸ்லாவியாமீது ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தியது NATO. இறுதியில் யூகோஸ்லாவிய அதிபர் பொறுப்பிலிருந்து மிலோசவிக்கை தூக்கியெறிய அமெரிக்கா 4 மில்லியன் டாலர், நோர்வே 16 மில்லியன் குரோணர்களை நேரடியாகவும், NGO க்கள் மூலமும் செலவு செய்த இரகசியம் வெளிப்பட்டுள்ளது).

சிறீலங்கா அரசும், புலிகளும் நேரடியாக யுத்த முனையில் மோதிக் கொண்டிருப்பதுடன், சர்வதேச அளவில் ஒரு இராஜதந்திர யுத்தத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா இரண்டு மாதங்களாக அய்ரோப்பிய நாடுகளில் தங்கி நின்று அரசின் நெருக்கடியை தீர்க்க ஆதரவு கோரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். பிரான்சில் மார்கழி மாதம் நடந்த சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நேரடியாகவும் கலந்து கொண்டார்.

நோர்வே தூதர் 'சோல்கைம்' மீண்டும் காட்டுக்கு சென்று பிரபாகரனை சந்திப்பது பற்றி கூறுகிறார். கால நேரம் பற்றி முன் கூட்டி சொல்ல முடியாது என்கிறார். அதற்கு முன்பாக, புலிகளின் மற்றய தமிழ்க்கட்சிகளின், கோரிக்கைகளை, சிங்களக் கட்சிகளின் எதிர்ப்பை நாடி பிடித்து பார்க்கிறது நோர்வே அரசு. அரசு சாரா அழுத்தக் குழுக்கள் (NGO LOBBY) மூலம் போர் நிறுத்தம், பேச்சு வார்த்தை, சமாதானம் பற்றிய பிரச்சாரங்களும், வெகுசனப் பேரணிகளும் துரித கதியில் முடுக்கி விடப்படுகின்றன, மட்ட கிளப்பில் 8 NGO-க்களின் பேரணி, கொழும்பில் சமாதானப் பேரணிகள் வெளிப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணிசேரா அமைப்பின் செயலரும், பிரிட்டன் வெளியுறவு பிரதிநிதியுமான பீட்டர் கெயின், பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு, சமாதானம் ஏற்பட சம்பந் தப்பட்ட தரப்பினரை சந்தித்து பேசவும், நிர்ப்பந்தம் (அழுத்தம்) கொடுக்கவும் சிறீலங்காவுக்கு வந்திருந்தார். அய்ரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி யாழ்பாணத்தில் போர் நிலைமைகளை ஆய்வும் செய்யவும், மனிதாபி மான உதவிகளை பற்றி பரிசீலிக்கவும் ஒரு குழுவுடன் யாழ் வந்துள்ளார். அமெரிக்காவின் தெற்காசிய கொள்கை வகுப்பு பராமரிப்பு பரதிநிதி கார்ல் இந்தர் மேற்கண்ட நோக்கங்கள் பற்றிய அமெரிக்க கொள்கைகளை தெளிவுபடுத்த விசேட பயணம் செய்தார். சிறீலங்கா வுக்கும் தெற்காசிய நாடுகளுக்கும். அமெரிக்க தேசிய உளவுச் சபை NIC '2015இல் உலக நிலமை' (2015 GOLOBAL TREND) என்ற அறிக்கையை தயாரித்துள்ளது. CIA, DIA இன் உதவியுடன், இதில் தெற்காசியா பற்றிய 68 பக்க அறிக்கை, அமெரிக்காவின் தெற்காசியா மீதான பார்வையை புரிந்து கொள்ள உதவும்.

நோர்வேயின் சமாதான தரகு முயற்சிகளுக்கு, அமெரிக்காவும், பிரிட்டனும் முழு ஒத்தாசை புரிவதை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் (NGO) அரசியல் இராஜ தந்திரிகள் ஒப்புக் கொள்கின்றனர். இம்மூன்று நாடு களும், உலக அமைதி நிறுவனங்களும் தங்களின் இரா ஜதந்திர முன்னெடுப்புக்கள் பற்றி உடனுக்குடன், இந்தியரசுடன் நேரடியாகவே பேசி வருகின்றன. இந்தியரசுக்கு உடன்பாடில்லாத முறையில், பேச்சு வார்த்தையை தொடங்க முடியாது. ஒப்பந்த்தை நிறைவேற்ற முடியாது என்பதில் தெளிவாக இருக்கின் றன. 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற் றுவதற்கு தடையாக மேற்கு உலக நாடுகள் சில எவ்வாறு இராஜதந்திர ரீதியில் செயல்பட்டன என்பது இந்தியா வுக்கும், அவர்களுக்கும் நன்கு தெரிந்த வரலாற்று அனுபவம். தெற்காசிய மீது குறிப்பாக இந்தியாவுடன் அமெரிக்காவுக்கும், அய்ரோப்பிய நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டு வரும் நெருக்கம் கவனிக்கத் தக்கது.

இந்தியரசு உள்நாட்டில் பல தேசிய இனங்களின் போராட்டத்தை எதிர் கொண்டுள்ளது. விடுதலை இயக்

www.tamilarangam.net



கங்களை அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும், சர்வ தேச இராஜதந்திர முறையிலும் கையாழ்வதில் பல முனைகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறது. ஒரு தேசிய இனத்தின் போராட்டத்தை யுத்தத்தின் மூலம் நசுக்கும் போது இன்னோர் தேசிய இனத்தின் போராட்ட இயக் கத்துடன் யுத்த நிறுத்தம் செய்வதும், இன்னோர் தேசிய இன போராட்ட இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத் துவதும், பாகிஸ்தானுடன் எல்லை யுத்தத்தை கையாழ் வதிலும் பலமுனை அணுகுமுறைகளை பின்பற்றி வருகிறது. மேற்கு உலக நாடுகளின் இராஜதந்திர சூழ்ச் சிகளை மிகவும் சாதுரியமாக எதிர்கொள்கிறது. போராளி இயக்கங்களுக்கு இடையிலான அரசியலமைப்பு வேறுபாடுகளை சர்வதேச ஆதரவு வேறுபாடுகளை, இயக்கங்களுக்கும், மக்களுக்கும் இடையிலான இடை வெளிகளை கவனமாக ஆராய்ந்து தனது நடவடிக்கை களை தீர்மானிக்கிறது. "பேச்சு வார்த்தைக்கு நெருங்கி வரக்கூடிய இயக்கங்களையும், அமைதியை விரும் பும் மக்களை வென்றெடுக்கவும் அன்னிய ஆதரவு பெற்ற தீவிரவாதிகளை தனிமைப்படுத்தவும் காசுமீரில் இந்தியரசு ரம்ஸான் பண்டிகை காலத்திற்கு என தன்னிச்சையாக போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது" என இந்தியப் பிரதமரே கூறியுள்ளார். அசாமில், ULFA போராளிகள் அசாமியர்களின் பண்டிகை தினத்துக்கு தாய் தந்தையர்களை சென்று பார்க்க, விருந்து உண்ண அரசு படைகள் அனுமதி வழங்கியுள்ளது. நகலாந்தில் NSCN(M) இயக்கத்துடன் யுத்த நிறுத்தம் செய்து வெளி நாட்டில் பேச்சு வார்த்தை நடத்துகிறது. போடோ விடு தலைப் புலிகள் இயக்கத்துடன் (BLT) யுத்த நிறுத்தம் செய்துள்ளது. தமிழ்நாட்டில் TNLF, TNRF கூட்டத்தை அழிக்க STF, BSF படைகள் தேடுதலில் ஈடுபட்டுள்ளது. இந்திய மத்திய அரசும், மாநில அரசும் தேசிய இன இயக்கங்களை அவற்றின் நீண்டகால - உடனடி அரசியல் இராணுவ கண்ணோட்டங்கள் செயற்பாடு களை பொறுத்து அவற்றை கையாழ்கிறது. இந்தியரசின் அனுபவங்களை சிறீலங்கா அரசும் பரிமாறிக் கொள்கிறது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட் டத்தையும், விடுதலை யுத்தத்தை நடத்தி வரும் புலிகள்

www.tamilarangam.net



இயக்கத்தையும் வேரோடு அழித்து விட முடியாது என்பதை எதிரிகள் புரிந்து கொண்டுள்ளனர். சிறீலங்கா அரசும், அதனை காப்பாற்ற முயலும் உலக அரசு களும் எத்தகைய சூழ்ச்சிகள், நிர்ப்பந்தங்கள், தடைகளை மேற்கொண்டும் புலிகளை சமரசப்படுத்திவிட கங்கணம் கட்டி செயல்படுகின்றன. முன்னர் அரசியல் சாசனத் துக்கு உட்பட்டே பேச்சு நடத்த தயார் எனக்கூறி வந்த சிறீலங்கா அரசு. இன்று அரசியல் சாசன திருத்தத்துக்கு தயார் என கீழ் இறங்கி வந்துள்ளது. ஆனால் சிறீலங் காவின் பிரதேச இறையாண்மைக்கு குந்தகம் அற்ற (பிரிவினையை அங்கீகரிக்காத) அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என உலக அரசுகள் திடமாகக் கூறுகின்றன.

புலிகள் இயக்கம் மட்டுமே யுத்தம் புரிகின்ற ஒரே இயக்கமாக இருப்பதால், புலிகளை சரிப்படுத்தி சமா தானப்படுத்தினால் தமிழீழப் போராட்டத்தை நசுக்கி, திசைதிருப்பி விட முடியும் என எதிரிகள் நம்புகின்றனர், சிறீலங்கா அரசுக்கு எதிராக ஒரே இயக்கமாக புலிகள் யுத்தம் புரிவதும், ஏனைய போராடும் இயக்கங்களை புலிகள்டை செய்திருப்பதும் எதிரிகளுக்கு சாதகமான அம்சம், தேசிய இனவிடுதலைப் போராட்டக்களங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட, வேறுபட்ட இலட்சியங்களை அரசியல் கோரிக்கைகளை கொண்ட பல இயக்கங்கள் இருக்கும் போது, அவற்றை கையாழ்வது உள்நாட்டு எதிரிக்கும் சமாதான தரகர்களுக்கும் கடினமான விடயம். குர்திஸ்தான், பாலஸ்தீனம் போன்ற போராட்டக் களங் களில் வெவ்வேறு இயக்கங்கள், வெவ்வேறு அண்டை நாடுகளின் ஆதரவுடன் போராடுகின்றன.) ஆனால் தமிழீழத்தில் எல்லாக் குட்டி முதலாளிய இயக்கங்களும் இந்தியரசின் நம்பிக்கைக்குரியவர்களாகவே இருந்தன. அதனால்தான் 87 ஒப்பந்தத்துடன் புலிகளை தவிர மற்றைய எல்லாம் சமரசம் அடைந்தன. இன்றைய நிலையில் இந்தியரசின் ஒத்தாசையுடன் புலிகளையும் - சிறீலங்கா அரசையும் சமரசப்பட வைக்க மேற்கு உலக நாடுகள் குறி வைத்துள்ளன.

நோர்வே அரசின் சமாதான தரகு முயற்சிக்கு தமிழீழப் பகுதியில் அனைத்து அரசியல் கட்சிகளும்

www.tamilarangam.net



ஆதரவு தெரிவித்துள்ளன. எத்தகைய அரசியல் கோரிக்கைகள் தீர்க்கப்படுவதன் அடிப்படையில் அரசியல் தீர்வும் சமாதானமும் ஏற்பட முடியும் என்பதில் வேறுபாடுகள் இருக்கின்றன. தமிழீழ புரட்சிகர தேசபக்த சக்திகள் தங்களின் அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளை வெளிப்படையாக முன்வைக்கின்றனர். மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளும் மக்கள் முன் வெளிப்படையாக முன் வைக்கவேண்டும். அப்போதுதான் அரசியல் தீர்வு பற்றி மக்களால் தீர்மானிக்க முடியும். மக்களால் எதிரிகளின் சூழ்ச்சிகள் நிர்ப்பந்தங்களை புரிந்து கொள்ள முடியும்.

நோர்வே அரசின் சமாதான தரகு முயற்சிகளை சிறீலங்காவில் J.V.P. சிறெல உறுமய போன்ற கட்சிகள் எதிர்க்கின்றன. தமிழர்களுக்கு ஆதரவாக அன்னிய நாடுகள் நுழைவதாகக் கூறி சிங்களத் தேசியம் பற்றி பேசுகின்றன. அரசால் நியமிக்கப்பட்ட நோர்வேக்கு பிரயாணம் செய்ய இருந்த 5 M.P. க்கான குழுவிலிருந்து J.V.P. இன் M.P. நந்தன குணதிலக வெளியேறியுள்ளார். நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு எதிராக வெளிப்படையான பிரச்சாரங்களும், பேரணிகளும் J.V.P. சிறெல உறுமய கட்சிகளால் நடத்தப்படுகிறது. நோர்வே துதரகம் நோக்கி, நோர்வே பணத்தில் இயங்கும் NGO அலுவலகம் பார்த்து குண்டுகளும் வீசப்பட்டது.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையை, இந்தக் கட்சிகள் ஒரு பிரச்சனையாக கருதுவதில்லை, சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்தையும், தமிழீழ மக்களின் விடுதலை யுத்தத்தையும (புலிகள் முன்னெடுத்தாலும் கூட) வேறுபடுத்திப் பார்க்க முடியாத J.V.P. போன்ற இடதுசாரிப் பெயர்ப்பலகையில் உள்ளவர்கள் அனைவரும் அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்ப்பதற்கு பதிலாக 'யுத்த எதிர்ப்பு அரசியல்' நடத்துகிறார்கள். தமிழ் மக்களின் போராட்டத்தை புலிப் பயங்கரவாதம் என்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க தாங்களே ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைத்து சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்க மறுக்கும் இவர்கள், சோசலிசப் புரட்சி, புதிய சனநாயகப் புரட்சி எல்லா

www.tamilarangam.net



வற்றையும் தீர்த்து விடும் என ஏமாற்றுகிறார்கள். தமிழீழ மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை அங்கீகரித்து தமிழீழ, சிறீலங்கா தேசங்களின் சமத்துவ உரிமைகளை ஏற்றுக் கொண்டு தமிழ், சிங்கள மக்களின், தேசங்களின் அய்க்கியத்தை முன்னிறுத்தி, சிறீலங்கா அரசுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக சமூக மாற்றம் வேண்டி போராடுவதை கைவிட்டு விட்டு, தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கையை நிராகரித்து விட்டு ஒட்டு மொத்த சோசலிசம் புரட்சி பற்றி பேசி வருகிறார்கள்.

சிறெல உறுமய J.V.P. போன்றன, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க, திசை திருப்ப, சமரசப்படுத்த முனையும் அன்னிய நாடு களின் தலையீட்டை காட்டி '**சிங்களத் தேசியத்தை**' கட்ட முனைகிறார்கள். 87-ல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக J.V.P. ஒரு கிளர்ச்சியை சிறீலங் காவில் நடத்தினர். எதிர்காலத்திலும் அத்தகைய ஒரு கிளர்ச்சி ஏற்படலாம். J.V.P. சிறீலங்காவின் அரசு அதிகாரத்தை கைப்பற்றினால்கூட தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகள் தீர்க்கப்படாதவரை போராட்டம் தொடரும் என்பதை புரிந்து கொள்ளத் தவறுகின்றனர். 1970- இல் குட்டி முதலாளிய '**திடீர்ப் புரட்சி**' நடவடிக் கையில் இறங்கி தோல்வி கண்ட J.V.P. 87 கிளர்ச்சியில் மீண்டும் தோல்வி கண்டது. பின்னர் பாராளுமன்ற பாதையில் சென்றிருப்பதுடன், இனவாத அரசியல் பாதையையும் அரவணைக்க தொடங்கியுள்ளது.

சிறீலங்காவிலுள்ள புரட்சிகர தேசபக்த சக்திகள். அன்னிய நாடுகள் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடுவதை எதிர்க்க வேண்டும், சிறீலங்கா தேசியத்தை நசுக்கி இல்லாதொழித்து உலகமயமாக்கி வரும் சிறீலங்கா அரசுக்கும், வல்லரசு களுக்கும் எதிரான நவகொலனிய எதிர்ப்புக் கொண்ட உள்நாட்டு வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்தி கூர்மைப்படுத்தவேண்டும், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைகளை புரிந்து கொண்டு தமிழீழ மக்களின் இன சமத்துவம் வேண்டும் அரசியல் கோரிக்கைகளை அங்கீகரிக்க கோரும், சிறீலங்கா இனவாத அரசுக்கும், வல்லரசுகளுக்கும் எதிரான

www.tamilarangam.net



நவகொலனிய எதிர்ப்புக் கொண்ட தமிழீழ மக்களின் புரட்சிகர தேசியப் போராட்டத்துடன் ஒன்றுபட்டு பொது எதிரிகளுக்கு எதிராக, தேசியப் போராட்டத்தை யும் வர்க்கப் போராட்டத்தையும் ஒன்றினைத்து முன்னேடுக்க வேண்டும், இதன்மூலமே உள்நாட்டு பிற்போக்கு அரசையும் அன்னியத் தலையீடுகளை யும் தோற்கடிக்க முடியும், ஒரு புதிய சனநாயக அரசை நிறுவ முடியும். இதற்குப் பதிலாக விடுதலைப் புலிகளின் எல்லைப் பாதுகாப்பு படைக்கு மாற்றாக, சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு படைச் சேர்ப்புக்கு **'சிறீலங்கா எல்லைப் பாதுகாப்பு தொண்டர்கள்'** என்ற பெயரில் அரசு ஆட்சேர்ப்புக்கு உதவுவதும், அன்னிய நாடுகள் இனப் பிரச்சனையில் தலையிடுவதை காட்டி, சிறீலங்கா தேசியத்தை கட்டி வளர்க்க முயல்வதும் அப்பட்டமான அரசு சார்பு இனவாதப் பாதையில் J.V.P. மூழ்குவதாகும். அதற்காக சிங்கள மக்களை தயாரிப்பதாகும். மக்களை பலியாக்குவதில் முடியும்.

தமிழீழமக்களின்தேசிய விடுதலைப் போராட்டத்தில், புலிகளின் முதலாளித்துவ தேசியவாதப் பார்வையானது, சிறீலங்கா அரசு எதிர்ப்பு குறித்தும், வல்லரசிய எதிர்ப்பு மற்றும் அன்னிய நாடுகளின் தலையீடு - ஆதரவு பற்றி கொண்டிருக்கும் கண்ணோட்டம், செயற்பாடுகள். தமிழீழ அரசின் சமூக பொருளாதார அரசியல், நீதி அதிகார முறைகள் தொடர்பாக வெளிப்படுத்தும் கொள்கைகள் அணுகுமுறைகள். நவகொலனிய இன ஒடுக்குமுறையை எதிர்கொள்ளும் முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் பற்றிய பார்வை அணுகுமுறை யிலும். நவகொலனிய சமூக பொருளாதார தேசிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள சிங்களத் தேசிய இன மக்களை பற்றி பார்வையிலும், இன விடுதலைக் காகவும், சமூக பொருளாதா அரசியல் விடுதலைக் காகவும் போராடும், உலகிலுள்ள சகோதர நாட்டு மக் களைப் பற்றிய கண்ணோட்டம் அணுகுமுறையிலும். புலிகளின் அரசியல் இராணுவப் போராட்ட பார்வை தமிழீழ தொழிலாளிவர்க்க தேசிய விடுதலை இயக்க பார்வையுடன் என்றைக்கும் ஒன்றுபட்டிருக்க முடியாது. இரண்டு உலககண்ணோட்டங்களில் தேசிய - சர்வதேசியப் பார்வைகளும் என்றும் அய்க்கியப்பட முடியாதது.

www.tamilarangam.net



புலிகளின் கண்ணோட்டங்கள், அணுகுமுறைகள் சிலவற்றுடன் முரண்படும் தமிழீழ குட்டி முதலாளியப் புரட்சியாளர்களும், வெளிநாடுகளில் (தமிழ்நாடு) புலிகளை மட்டுமே அங்கீகரிக்கும் ஆதரிக்கும் குட்டி முதலாளிய புரட்சியாளர்களும், தமிழீழ தொழிலாளி வர்க்க தேசபக்த இயக்கத்தை கலைத்துவிட்டு (கோட்பாட்டில் அரசியலில்) புலிகளுடன் அய்க்கியப் படுமாறும் புலிகளையே இன்றைய நிலையில் ஒரே விடுதலை இயக்கமாக ஏற்றுக் கொள்ளும்படியான பிரச்சார யுத்தத்தில் இறங்கியுள்ளனர். தொழிலாளர்வர்க்க தேசபக்த இயக்கத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் நிர்பந்திக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

புலிகளை மட்டுமே அங்கீகரிக்கும் ஆதரிக்கும் போக்கை வெளிப்படுத்தும் இத்தலைமைகள் தேசபக்த இயக்கத்தை சிறீலங்கா **'அரசின் முகவர்கள்'** என முத்திரை குத்த முயல்கிறார்கள்.

புலிகளை, போராளிகளாகக்கூட ஏற்றுக்கொள்ளாத போக்கை வெளிப்படுத்தும் தலைமைகள் தேசபக்த இயக்கத்தை **'புலிகளின் முகவர்கள்'** என முத்திரை பதிக்க முயல்கிறார்கள். இரண்டு தரப்பும் தங்களின் சொந்த அணிகளிடமும், தங்களை மட்டும் அங்கீகரிக்கும் வெளிநாடுகளிலுள்ள தமிழீழத்தவர்களிடமும் இத்தகைய பொய்ப் பிரச்சார சூழ்ச்சிகளை செய்து வருகின்றனர்.

சகோதர அமைப்புக்களுடன் தொடர்பை உருவாக்கவும், அமைப்பு ரீதியான அதிகாரபூர்வ உறவை உருவாக்கி பேணி வளர்க்கவும் நல்ல மூன்று வழிகள் உள்ளன.

1. ஒரு அமைப்பின் திட்ட, அரசியல் நிலைப்பாடுகளை படித்து புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டால், வெளிப்படையான அமைப்பு தொடர்புகள் மூலம் தொடர்பு கொண்டு பின், சக அமைப்பின் தலைமையுடன் அதிகாரபூர்வ உறவை பேணுவது வளர்ப்பது.

2. போராட்டக் களப் பகுதியில் நேரடியாக ஈடுபடுகின்ற சக அமைப்புடன் (எந்த மட்டத்தில் என்றாலும்) பகுதி மக்களின் நலனுக்கான போராட்டங்களில்

www.tamilarangam.net


ஈடுபடுவது, கூட்டுப் போராட்டம் நடத்துவது மூலம், பரஸ்பர அமைப்பு உறவை தொடக்கி, பின் அமைப்புகளின் தலைமைகளுக்கு இடையிலான அதிகார பூர்வ உறவாக வளர்வது, வளர்ப்பது.

3. பல விசேட வாய்ப்புக்கள் மூலம் நேரடியாக சக அமைப்புக்களின் தலைமை மட்ட தொடர்புகள் கிடைக்கும் போது, அதன்மூலம் உறவை தொடக்கி, திட்டங்ககள் ஆவணங்களை பரஸ்பரம் பரிமாறி, உரையாடி அமைப்புக்களுக்கு இடையிலான அதிகார பூர்வ உறவை வளர்ப்பது பேணுவது.

இதற்க்குப் பதிலாக, சிறீலங்கா அரசால் மட்டுமல்ல, துரோக இயக்க தலைமைகளால், புலிகளால் தடை செய்யப்பட்டு, தேடப்பட்டுக் கொண்டிருக்கும், தமிழீழப் புரட்சிகர இயக்கங்களின் தலைமைத் தோழர்களை நேரடியாகவும், ஆரம்ப சந்திப்புக்களிலேயே பார்க்க கோருவதும், இரகசிய - அரை இரகசிய வாழ்வில் உள்ள தோழர்களின் இருப்பிட, வேலைத்தல முகவரிகளை கோருவதும் **"எங்களைவிட இவர்கள் பெரிய இரகசியக் கட்சியா"** என்று பேசுவதும், சகோதர அமைப்புகளுக்கு இடையிலான அடிப்படை உறவுக்கு ஆரோக்கியமானதல்ல.

ஒவ்வொரு கட்சியும், தன்னையும் தலைமையையும் பாதுகாத்துக் கொள்ள, தனக்கான வழிமுறைகளை தானே உருவாக்கி கொள்கிறது. உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதை மீறி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. சக அமைப்புக்கள் மேல் புலி என குற்றச் சாட்டுவதும், சக அமைப்பு உள் விவகாரத்தில் பூனை போல் தலை நுழைப்பதும் இவற்றை சக அமைப்புடனான ஆன உறவுக்கு அடிப்படையாக முன்னிறுத்துவதும் மிக மிகத் தவறானதாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில், வர்க்க அரசியலை, அமைப்பு முறையை அரசியல் ரீதியாக எதிர் கொள்வதற்கு பதில் குறுக்கு வழிகளை நாடுகின்றனர். இத்தலைமைகளின் சூழ்ச்சிகள், பொய்க் குற்றச்சாட்டுகள், புறக்கணிப்புக்கள், புறம் பேசுதல்

www.tamilarangam.net



களை, நிர்ப்பந்தங்களை முறியடித்து முன்னேற வேண்டிய நிலையில் தமிழீழ தேசபக்த இயக்கம் உள்ளது. பரந்துபட்ட மக்களிடம், ஆதரவுச் சக்திகளிடம்; நேர்மையான அணிகளிடம் புரட்சிகர தேசபக்த அரசியலை உறுதியாக - தெளிவாக முன் வைக்க வேண்டியுள்ளது. அமைப்புச் செயற்பாடுகளில் மக்களிடம் தேசபக்தர்கள் முழுமையாக அய்க்கியப்பட்டுச்செயற்படவேண்டும். சகோதரத்தலைமையின், தலைவர்களின் குறுகிய கண்ணோட்டம், அணுகு முறைகளை தோழமையுடன் உணரச்செய்ய வேண்டியுள்ளது. உலகின் ஒவ்வோர் மூலையிலும் உள்ள தேசபக்த இயக்க உறுப்பினர்கள் மிகவும் பொறுப்புணர்வுடன், பொறுமையுடன் இதைச் செய்ய வேண்டும்.

தமிழீழ தொழிலாளி வர்க்க தேசிய விடுதலை இயக்கமானது; தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் மேலும் பலப்படுத்தும் நோக்கில், சிறீலங்கா அரசுக்கு எதிராக போராடும் அனைத்து சக்திகளையும், நட்பு சக்தியாக பார்க்கிறது. எல்லா வகைப் போராட்டங்களையும் அங்கீகரிக்கிறது. புலிகளின் யுத்தப் பங்களிப்பை மதிக்கிறது. புலிகளின் தொடர்ச்சியான விட்டுக்கொடுப்பற்ற போராட்டத்தை வரவேற்கிறது. இவை அனைத்தும். சிறீலங்கா அரசுக்கும், வல்லரசுகளுக்கும் எதிரான தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இறுதி வெற்றியை நோக்கி கொண்டு செல்வதற்கே.

தேசிய விடுதலைப் போராட்டத்தில், பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில், எந்த அரங்கிலும் முதலாளித்துவ தேசிய இயக்கத்துடன் 'அய்க்கிய முன்னணி' கட்டிச் செயற்படுத்துவதற்கு தொழிலாளி வர்க்க தேசபக்த இயக்கம் தயாராகவுள்ளது. அதே வேளை எக்காரணத்தை கொண்டும் முதலாளித்துவ தேசிய இயக்கத்துடன் 'அய்க்கியப்பட முடியாது' என்பதிலும் தெளிவாக உள்ளது. விடுதலைப்புலிகளுடனான உறவுக்கும் இதுவே நமது அடிப்படை.

www.tamilarangam.net



# போரா - சமாதானமா

சிறீலங்கா அரசின் 14 ஆண்டு கால இனவாத ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கும், இந்திய சமாதான(?) 3 ஆண்டு ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கும் இதுவரையில் 62,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 6,00,000 மக்கள் உள்நாட்டில் அகதி முகாம்களில்/திறந்த வெளியில் இடம் பெயர்ந்துள்ளனர், 3,00,000 மக்கள் அய்ரோப்பிய - அமெரிக்க நாடுகளில் புகலிடமாகியுள்ளனர். இந்திய அகதி முகாம்களில் 65,000 பேரும், வெளியில் 30,000 பேரும் அகதிகளாகவுள்ளனர். உலகில் ஈராக்குக்கு அடுத்த நிலையில் 2-வது இடத்தில் 14,500 பேர் காணாமல் போயுள்ளனர். 26,000 பெண்கள் யுத்தத்தில் கணவனை இழந்து விதவைகளாகியுள்ளனர். 72,000 மாணவர்கள் அடிப்படைக் கல்வி இன்றியுள்ளனர். தமிழீழ மக்களின் விடுதலைக்கான யுத்தத்தில் 16,000 புலிப் போராளிகள் மாவீரர்களாகியுள்ளனர். ஏனைய இயக்கங்களின் போராளிகள் 2,500 பேர் தியாகம் செய்துள்ளனர். இயக்கங்களுக்கு இடையிலான மோதலிலும் உட் கொலைகளிலும் 1,800 (கிட்டதட்ட) உயிர் இழந்துள் ளனர். இலங்கைக்கு - இந்தியாவுக்கும் இடையிலான கடலில் சில நூறு போராளிகளும் அகதிகளும் இறந்துள் ளனர். தமிழர்களின், முஸ்லீம்களின் பல பில்லியன் அசையும், அசையா சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளது.

இந்த இழப்புக்களை பட்டியல் இட்டுக் காட்டி 'யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு, சமாதானம்' பற்றி பேசப்படுகிறது.

சிறீலங்கா அரசும், அதனது உலக நட்பு அரசுகளும். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் இழப்புடன், யுத்த செலவையும் பட்டியல் இட்டு, யுத்த நிறுத்தம். அரசியல் தீர்வு ஏற்பட்டால் யுத்தச் செலவை, மக்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முடியும், பொருளாதார நெருக்கடியை சரி செய்ய முடியும் என்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்நாட்டு, வெளிநாட்டு (NGO) அரசு சாரா நிறுவன னங்களோ, அரசுகள் கூறும் காரணங்களை கூறுவதுடன், யுத்தப் பகுதியில் தங்களின் பொருளாதார சீர்திருத்த திட்டங்கள் மேலும் வளர்ச்சி பெறும். மக்களின் மேல் சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமை குறையும். எனவே யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தை அரசியல் தீர்வு சமாதானம் கோரி அதற்காக அரசையும், விடுதலை இயக்கங்களையும் அழுத்துகின்றன.

விடுதலைப் புலிகளோ, "நிபந்தனை அற்ற பேச்சு வார்த்தைக்கு தயார்." போர் நிறுத்தத்தை தாங்களே முன்வந்து செய்துள்ளனர். மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்துக்கும், அரசியல் தீர்வுக்கும், சமாதானத்துக்கும் தாங்கள் எதிரானவர்கள் இல்லை எனக் கூறுகின்றனர். சிறீலங்கா அரசு பொருளாதார, மருந்துத் தடைகளை நீக்கி சுமுக சூழ்நிலை உருவாக்கினால் பேச்சு வார்த்தை இலகுவாக இணக்க சூழ்நிலைமையில் நடைபெறும் என்கின்றனர். சிறீலங்கா அரசில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகள் பெரும்பாலானவை புலிகளுடன் பேச்சு நடத்தி அரசியல் தீர்வு காணாமல் அமைதி, சமாதானம் சாத்தியம் இல்லை என்கின்றனர், சிறீலங்கா அரசுடன் அனைத்து நிலைகளிலும் கூடிச் செயற்படும் EPDP, EPRLF (வரதர்) சந்திரிகா அரசின் சூழ்ச்சிகளை அமுல் செய்ய முனைகின்றனர்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக; தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனி நாடாக பிரிந்து தமிழீழ ஆட்சி அமைப்பது என்ற அரசியல் இலக்கில் இருந்தே இதுவரை விடுதலை யுத்தம் தொடர்ந்து வருகின்றது. தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் இழப்புக்கள், துன்பங்கள், துயரங்கள் அத்தனையும் தனி அரசு அமைப்பது என்ற அரசியல் இலட்சியத்தை அடைவதற்கான யுத்தத்தால் ஏற்பட்டவை என்பது தெளிவானது; விடுதலை இயக்கங்களின் தலைமைகளின், தலைவர்களின் சிறுபிள்ளைத்தனமான யுத்தத்துக்காக தமிழீழ மக்கள் இவ்வளவு பெரிய, கொடிய இழப்புக்களை, தியாகங்களை செய்யவில்லை.

www.tamilarangam.net



எனவே சிறீலங்கா அரசும், உலக நட்ப்பு அரசுகளும், அரசு சாரா நிறுவனங்களும் (NGO's) இழப்புக்களை பட்டியல் இட்டுக் காட்டி என்ன விலை கொடுத்தும். அரசுகள் வழங்கத் தயாரான அரசியல் உரிமைகளை மட்டும் பெற்றுக் கொண்டு, புலிகளை சமரசப்படுத்தி தமிழீழ மக்களின் தலையில் அரசியல் தீர்வை, சமாதானத்தை, அமைதியை கட்டிவிட முயல்கின்றன. அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்தி விடுதலை யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வேளையில், ஆயுதங் களை கைவிட்டால்தான் சமரசப் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு என்ற சிறீலங்கா அரசு. இன்று ஆயுதங் களுடன் சமரசப்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. விடுதலைப் போராளிகளின் எந்தக் கோரிக்கைகளை தீர்க்க தயராகவுள்ளது அரசு, என்பதை அறிவிக்க முடியாத நிலையிலுள்ளது. ஆனால் மக்களை ஏமாற்ற மொட்டையாக யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தை சமாதானம், அமைதி என அரசும், அரசு சாரா நிறுவனங் களும் பிரச்சார யுத்தத்தில் இறங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைக்காக போராடுகின்ற இயக்கங்கள் கூட, யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை அரசியல் தீர்வு, அமைதி, சமாதானத்துக்கு தாங்களும் தயார் என அறிக் கைகள் விடுவதும், பேசுவதும் வழக்கம். ஆனால் பேச்சு வார்த்தைக்கான தங்களின் அரசியல் கோரிக்கை - அதிகார வடிவங்கள் குறித்து தெளிவான முடிவை, மக்கள் முன் வெளிப்படையாக வைப்பதில்லை.

தமிழீழ அரசின். அரசியல் அதிகார வடிவங்கள், பொருளாதார திட்டங்களை சம்பிரதாயமாக முன் வைத்த இயக்கங்கள் கூட, பேச்சு வார்த்தைக்கான தங்களின் அரசியல் திட்டங்கள் பற்றி எதையும் முன் வைக்கவில்லை. 1985-இல் எல்லா இயக்கங்களும் பேசி ஏற்றுக் கொண்ட நான்கு அம்ச அரசியல் கோரிக் கையான 'திம்புக் கோரிக்கை'களையே அரசுடன் பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக முன்னிறுத்தி வந்தன. 1987-இல் திம்புக் கோரிக்கைகளைக் கூட கைவிட்டு புலிகள் தவிர மற்றய எல்லா முதலாளிய, குட்டி முதலாளிய தமிழ்க் கட்சிகளும் இலங்கை -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய ஒப்பந்தத்தில் சமரசம் அடைந்தன. தமிழீழ மக்களுக்கும், போராட்டத்துக்கும் துரோகம் இழைத்தன. 1985 போராட்டத்தின் வளர்ச்சியும், மக்களின் இழப்பும் தியாகமும் வேறு 2000-இல் நிலமை முற்றிலும் வேறு.

இன்றும் கூட திம்புக் கோரிக்கைகளை அங்கீகரித்து அரசியல் தீர்வு காண மறுக்கும் சிறீலங்கா அரசையும், உலக நட்ப்பு அரசுகளையும், இக்கோரிக்கைகளை முன்னிறுத்தி அமைதி, சமாதானம் பற்றி பேச மறுக்கும் உள்நாட்டு - வெளிநாட்டு (NGO's) அரசு சாரா நிறுவனங் களை, அமைதி நிறுவனங்களை தமிழீழ மக்கள் என்றும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

நோர்வேயின் சமாதானத் தூதர் 'எரிக் சோல்கைம்' நேரடியாக வன்னிக்கு சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்து பேசிச் சென்றபின், தமிழீழ மக்களும், உலக மக்களும் புதிய எதிர்பார்ப்புக்குள்ளா கினர். ஊடகங்கள் அமைதி, சமாதானம் அரசியல் தீர்வு பற்றி, பிரபாகரன் - எரிக்சோல் கைம் சந்திப்பு பற்றிய புகைப்படங்களை வெளியிட்டதுடன் புதிய நம்பிக் கைகளை விதைத்தன.

புத்தாயிரம் ஆண்டின் மாவீரர் தின உரையில் பிரபாகரனின் நற்செய்தியை தமிழீழ மக்களும், உலகமும் வழமை போல் எதிர்பார்த்திருந்தது. **"நிபந்தனை அற்ற பேச்சு வார்த்தைக்கு புலிகள் தயார். சுமுகமான இணக்க மான சூழ்நிலமையை அரசு தோற்றுவிக்க வேண்டும்."** இந்தப் பேச்சை, மாவீரர் தின உரையை புலிகளும், புலிகளின் சர்வதேச ஆதரவாளர்களும், புலி ஆதரவு ஊடகங்களும் பல வடிவங்களில் வியாக்கியானப் படுத்தி வருகின்றன. பிரபாகரன் மிகச்சிறந்த இராணுவ நிபுணர், தளபதி மட்டுமல்ல. மிகச் சிறந்த அரசியல் இராஜ தந்திரி எனவும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

ஓயாத அலை - 3-இன் மிகப் பெரிய இராணுவ வெற் றிக்கு முன்பே, 1997-இல் சந்திரிகா அரசின் பாராளு மன்ற தெரிவுக்குழு முன்வைத்த 'அரசியல் தீர்வு பெட்டகம்!' தொடர்பாக 1998-இன் மாவீரர் தின உரையில் பிரபாகரன். அரசுடன் பேச்சு வார்த்தைக்கு

www.tamilarangam.net



திம்புக் கோரிக்கைகளை அடிப்படையாக புலிகள் முன்னிறுத்துவதாக தெரிவித்தார். 2000-இல் மிகப் பெரிய இராணுவ வெற்றி பற்றி, நிபந்தனை அற்ற பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு குறித்தும், சர்வதேச நாடுகளின் நெருக்குதல் பற்றியும் நாசுக்காக தெரிவித்த பிரபாகரன், பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக 'திம்புக் கோரிக்கை' குறித்து ஏன் பேசவில்லை, திம்புக் கோரிக்கைகள் உள்ளடங்க உயர்ந்தபட்சமான / அரசியல் அதிகாரக் கோரிக்கைகளை புலிகளும், தேசியத் தலைவரும் முன்னிறுத்துகிறார்கள் எனில் அவை என்ன என்ன என்பதை மாவீரர் தினத்தில் பேச மறுத்ததன் - பேச மறுப்பதன் மர்மம்தான் என்ன?

ஓயாத அலை - 3-இன் முன்னேறுதலை இந்தியா உட்பட மேற்குலக நாடுகள் தடுத்து நிறுத்த நிர்பந்தித்ததை பற்றி குறிப்பிட்ட பிரபாகரன், 95-இல் சிறீலங்கா அரசின் யாழ் மீதான ஆக்கிரமிப்பை ஏன் சர்வதேச நாடுகள் தடுக்க முன்வரவில்லை எனக் கேள்வி எழுப்பினார். சிறீலங்கா அரசும், சர்வதேச அரசுகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, புலிகளை அழிக்க - பலவீனப்படுத்த - திசை திருப்பி சமரசப்படுத்த முயன்று கொண்டிருப்பதை நன்கறிந்துள்ள புலிகளின் தலைமை, தலைவர் போராட்டத்தை அரசியல் ரீதியில், இராணுவ ரீதியில் மக்கள் மயப்படுத்துவதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. சிறீலங்கா அரசுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வல்லரசு எதிர்ப்பு போராட்டமாக முன்னேடுக்கின்ற தமிழீழ புரட்சிகர தேசபக்த அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவது, இயங்க அனுமதிப்பது; முஸ்லீம் மக்களை வெளியேற்றியதை திரும்பப் பெறுவது, எதிரிகளுக்கு சாதகமான முறையில் புலிகள் கடந்த காலத்தில் இழைத்த தவறுகளை வெளிப்படையாக சுயவிமர்சனப்படுத்தி போராட்டத்தை பலப்படுத்துவது, அரசுடனான பேச்சு வார்த்தைக்கு குறைந்தபட்ச அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து அதனை ஏற்றுக் கொள்ளும் அனைத்து தமிழீழ அரசியல் கட்சிகளை, இயக்கங்களை ஒரு 'பொது முன்னணிக்குள்' கூட்டிணைப்பது, பற்றி ஏன் புலித்தலமை சிந்திக்க

www.tamilarangam.net



மறுக்கிறது. மாவீரர் தின உரையில் இவற்றை பிரபாகரன் ஏன் பேசவில்லை. இதுபற்றி தமிழீழ மக்களும், விடுதலையில் அக்கறையுள்ள அனைவரும், உலக ஆதரவாளர்களும் சிந்திக்க வேண்டிய வேளையிது.

2000 மாவீரர் தின உரையில், புலிகள் தாங்களாகவே முன்வந்து நிபந்தனை அற்ற பேச்சுக்கு தயார் என அறிவித்ததும், 1994 முதல், வருடம் ஒரு தடவை UNICEF-இன் போலியோ தடுப்பு மருந்து போடும் நாட்களில் புலிகளும் - அரசு படையும் தன்னிச்சை யாக போர் நிறுத்தம் செய்வது வழக்கம். 2000-இல் இரண்டு தரப்பும் அதை மீறினார்கள். ஆனால் புலிகளின் தலைவர், கிறிஸ்மஸ், புத்தாண்டு, பொங்கல் என பண்டிகையை முன்னிட்டு 1 மாத கால போர் நிறுத்தத்தை தாங்களாகவே அறிவித்து, போர்முனை அணிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். இதை புலிகளின் இராஜ தந்திரமான நடவடிக்கைகள் என்பதா? புலிகள் மீதான சர்வதேச நிர்ப்பந்தம் என்பதா?

சிறீலங்கா அரசும், பாதுகாப்பு அமைச்சரும் போர் நிறுத்தம் செய்துவிட்டு, புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியாது. கடந்த காலங்களைப் போல புலிகள் ஏமாற்றி விடுவார்கள். எனவே போரும், பேச்சு வார்த்தையும் ஏககாலத்தில் நடத்தப்படும் என்கிறது. உலக நியதிகளுக்கு முரணாகவே பேசுகிறது, புலிகளை இந்தியாவும், அமெரிக்காவும் தடை செய்தி ருப்பது போல் பிரிட்டனும் தடை செய்ய வேண்டும் என சிறீலங்கா வெளியுறவு அமைச்சு கோரி வருகிறது. பிரிட்டனும் தடை பற்றி பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளது. புலிகள் தங்கள் மீதான சிறீலங்கா அரசின் தடை நீக்கப் பட்டால்தான் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும் என நிபந்தனை போட வேண்டிய நிலமை. போர் நிறுத்தத்தை அறிவித்த புலிகள், இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், அய்ரோப்பிய யூனியன் நாடுகள் சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்க கோரினர்.

புலிகளின் தலைமை பேச்சு வார்த்தைக்கு அடிப் படையாக தங்களின் அரசியல் - அதிகாரக் கோரிக்கை களை முன்வைத்து, அரசை முன்கூட்டி நிர்ப்பந்திப்ப

www.tamilarangam.net



தற்கு பதிலாக 1994-இல் நடந்து கொண்டது போல் சுமூக சூழல், இணக்க நிலமை என்ற பெயரில் தங்களின் கட்டுப்பாட்டு பகுதி மக்கள் மீதான சிறீலங்கா அரசின் பெருளாதார, மருத்துவ தடைகளை நீக்குவதில் மட்டும் குறியாகவுள்ளனர். இதுவும் முக்கியமான அம்சம் தான். ஆனால் அடிப்படையானது. பேச்சு வார்த்தைக் கான, நிரந்தர அரசியல் தீர்வுக்கான, அரசியல் கோரிக் கைகளை முன்னிறுத்த வேண்டும். சிறீலங்கா அரசின், உலக அரசுகளின் அரசியல், பொருளாதார, இராணுவ, இராஜ தந்திர சூழ்ச்சிகளை முறியடிக்க, அரசியல் தீர்வுக்கான தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளே, தமிழீழ மக்களின் அமைதிக்கான "அரசியல் தீர்வுப் பொதியே" பயன்படும், தமிழீழப் போராட்டத்தை நசுக்க, சர்வதேச நாட்டு அரசுகள் முயலும் போதும் அதை முறியடிப்பதற்கு பதிலாக தற்காலிக பொருளாதார, மருத்துவ, உணவுத் தடைகளை மட்டும் முறியடிப்பதன் மூலம் போராட்டத்தை தொடர முடியாது; நீண்ட காலத்துக்கு எதிரிகள் இந்த தடை நீக்கங்களை அனுமதிக்க மாட்டார்கள். அரசியல் - அதிகார ரீதியில் தங்களுடன் சமரசப்படுத்தவே முயல்வார்கள். முடியாத போது தடையை மக்கள் மீது திணிப்பார்கள். (ஈராக் - ஆப்கான் மீது அமெரிக்காவும், ரசியாவும், அய்நா சபையும் என்ன செய்கிறது என்பது நமக்கு நல்ல முன் அனுபவம் அல்லவா?) 1994-ல் புலிகள் போர் நிறுத்தத்தை மீறியபோது **"புலிகளை போர் வெறியர்கள்"** என சந்திரிகா அரசு பெயர் சூட்டியது பழைய கதை. இன்று சர்வதேச நாடுகள் முன்னிலையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு புலிகள் மீறினால் 'சர்வதேசப் போர் வெறியர்கள்' எனப் பெயர் சூட்டி சர்வதேச நாடுகள் கூட்டுச் சேர்ந்து நசுக்க முயல்வார்கள்.

யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தைக்கு அரசியல் கோரிக்கைகளை வெளிப்படையாக முன்னிறுத்தி புலிகளின் தலைமை, புலிப் போராளிகளையும், உள் நாட்டு மக்களையும், உலக மக்களையும் அதற்கு ஆதரவாக திரட்ட வேண்டும், அப்போதுதான் சிறீலங்கா அரசின், உலக அரசுகளின், அரசு சாரா நிறுவனங் களின், தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளை

www.tamilarangam.net



அங்கீகரிக்காத, பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு, அமைதி, சமாதானம் போன்ற சூழ்சிகளை, முகமுடிகளை கிளித்தெறிய முடியும்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆரம்ப காலம் முதல் தமிழீழ தொழிலாளி வர்க்க விடுதலைப் பாதைக்கும், தமிழீழ முதலாளி வர்க்க விடுதலைப் பாதைக்குமான வேறுபட்ட மார்க்கங்கள், வேறுபட்ட விடுதலை இயக்கங்கள் போராடி வந்தன. தொழிலாளி வர்க்க தேசிய விடுதலைப் பாதையை முன்னெடுத்த தலைமைகள், தங்களின் சந்தர்ப்பவாத, குட்டி முதலாளிய அரசியலை தொடர்ந்து சுயவிமர்சனப்படுத்தி போராடத் தவறியதால், புரட்சிகர தொழிலாளி வர்க்க தேசிய விடுதலை இயக்கத்தை கட்ட முடியவில்லை. தேசிய விடுதலைப் போராட்டத்தில் தொடர்ச்சியான வர்க்க அரசியலை, போராட்டத்தை கூர்மைப்படுத்த தவறினர். உலக பிராந்திய நிலைமைகளை புரியாமல் அத்தகைய நிலையில் அவ்இயக்கங்கள் உள்மோதலால் உடைந்து பிளவுபட்டன. சந்தர்ப்பவாத தலைமைகள் 87 ஒப்பந்தம் மூலம் சமரசப்பட்டு துரோகம் இழைத்தன. சிறு புரட்சிகர அமைப்புகள். புலிகளின் முதலாளித்துவ தேசிய விடுதலை பாதை பலப்பட்ட நிலையில் தலைமைகளால் கலைக்கப்பட்டன. அல்லது முதலாளித்துவ கலப்பு வாதத்துக்கு பலியாகின. தொழிலாளி வர்க்க விடுதலைப் பாதையை நேசித்த, நம்பி உணர்வு பூர்வமாக போராடிய ஆயிரக் கணக்கான போராளிகள் உலகம் முழுவதும் சிதறுண்டு உள்ளார்கள். தமிழீழத் தொழிலாளி வர்க்கமும், விவசாய வர்க்கமும், குட்டி முதலாளிய வர்க்கமும் ஆன பெரும்பான்மை மக்களின் சமூக பொருளாதார அரசியல் உரிமைக்கான போராட்டம் இன்றும் புகைந்து கொண்டிருக்கிறது. அவர்களின் தேசிய விடுதலைக்கும், வர்க்க விடுதலைக்குமான அரசியல் இயக்கமாகவே 'தமிழீழ புதிய சனநாயகக் கட்சி' தன்னை அர்ப்பணித்துள்ளது.

புலிகள் இயக்கம் நாளை பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு ஒரு ஒப்பந்தத்தின் மூலம் அதிகாரத்தை கைப் பற்றி சமரசப்பட்டாலும், புலிகளுக்கு பின்னால வால்

www.tamilarangam.net



பிடித்துக் கொண்டு, தொழிலாளி வர்க்க தேசிய விடுதலை இயக்கத்தை கலைத்துவிடக் கூடாது. நவ கொலனிய தமிழ் அதிகார அமைப்புக்கு பலியாகிவிடக் கூடாது. தமிழீழ தொழிலாளி வர்க்க தேசிய விடுதலை பாதையாளர்கள், தமிழீழ புதிய சனநாயகப் புரட்சிக்கான திட்டத்தை கொண்டிருக்கும் அதேவேளை, பேச்சு வார்த்தைக்கான உடனடித் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றனர். இவ்உடனடித் திட்டத்தின் அடிப்படையில் தமிழீழ மக்களுக்காக நிற்க்கின்ற எந்த ஒரு அரசியல் - ஆயுதப் போராட்ட இயக்கத்துடனும், "பொது முன்னணி" ஒன்றை கட்டி செயற்பட தமிழீழ புதிய சனநாயகக் கட்சி தயாராகவுள்ளது.

- ஆசிரியர் குழு

## தமிழ்த் திருநாள்

*பகுத்தறிவுக் கொவ்வாத கதையைக் கேட்டுப்*
*பலவாகத் திருநாளைப் பெருக்கிக் கொண்டோம்*
*இகழ்ச்சிதரும் பொய்க்கதையை இனிமே லேனும்*
*இல்லாமல் தீயிட்டுப் பொசுக்க வேண்டும்*
*உழைக்கின்ற செந்தமிழர் குருதி தன்னை*
*உறிஞ்சியே தன்வாழ்வை நடத்து கின்ற*
*பழிகாரக் கும்பலினை யொழிக்கு நாளே*
*பைந்தமிழர் வாழ்வினிலோர் திருநா ளாகும்*
*அறுபதாண் டுகள்வந்த கதையைப் பார்த்தால்*
*அறிவுநெறி கற்புமுறை யனலில் வேகும்*
*குறள்தந்து தமிழ்காத்த புலவன் பேரால்*
*கொண்டிடுக தமிழாண்டைத் தமிழ் மக்கள்*
*தைத்திங்கள் முதலானனைத் தமிழராண்டின்*
*தலைநாளாய்க் கொண்டாந்தத் தலைநா டன்னில்*
*தைப்பொங்கல் விழாவினையோர் திருநாள ளாக்கித்*
*தமிழ்த்திருநாள் கொண்டாடித் தமிழர் வாழ்க.*

www.tamilarangam.net



# யுத்தத்தை நிறுத்து அரசியல் தீர்வை அமுல்ப்படுத்து

புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும், தொழிலாளிவர்க்க தேசிய விடுதலை இயக்கமும் மிகமிகப் பலயீன்மான நிலையில் இருக்கிறோம். நமது சரியான நீதியான அரசியல் கோரிக்கைகளின் பலமும், சிறந்த நடைமுறைச் செயற்பாடும் எதிர்காலத்தில் போராட்டத்தின் திசைவழியை தீர்மானிக்கவல்லது. நாம் பேச்சு வார்த்தையை, அரசியல் தீர்வை, அமைதியை, சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அல்ல. நமது எதிரிகளை விட நாம் இவற்றில் தெளிவையும், உறுதியையும், நம்பிக்கையையும் கொண்டிருக்கிறோம். இது தமிழீழ மக்களுக்கும், உலக மக்களுக்கும் உணர்த்தப்பட வேண்டும், உரைக்கப்பட வேண்டும்.

நமது அரசியல் கோரிக்கைகள், மக்களின் கோரிக்கைகளாக, மக்கள் போராட்டம் மூலம் மாற வேண்டும். தமிழீழ விடுதலைக்காக இதுவரை காலம் சிந்திய இரத்தத்துக்கும், செய்த தியாகங்களுக்கும், ஏற்பட்ட இழப்புகளுக்கும் உயர்ந்தபட்ச பலனை பெறுவதாக பேச்சு வார்த்தைக்கான அரசியல் அடிப்படைகள் இருக்க வேண்டும்.

சிறீலங்கா அரசை பலாத்கார ரீதியாக தோற்கடித்து, தனித்தமிழீழ அரசை உருவாக்கப் போராடி வரும் புலிகளின், நவகொலனிய தமிழீழ அரசுக்கும், தமிழீழ தொழிலாளி வர்க்க தேசிய இயக்கம் அமைக்கவுள்ள புதிய சனநாயக தமிழீழ அரசுக்கும், இடையிலான வேறுபாடு மருவுக்கும் மலைக்குமானது. அதேபோன்று

www.tamilarangam.net



பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வுக்காக புலிகள் முன்னிறுத்துகின்ற அரசியல் - அதிகாரக் கோரிக்கை களுக்கும். புரட்சிகர தேசபக்த இயக்கம் முன்னிறுத்தும் அரசியல் அதிகார கோரிக்கைகளும் கூட வேறுபட்டி ருப்பது தவிர்க்க முடியாதது. புலிகள் தொடர்ந்து போர் புரிந்தாலும் அல்லது அதிகாரப் பங்கீட்டில் சமரசப் பட்டாலும், தமிழீழ மக்களின் புதிய சனநாயகப் புரட்சி நோக்கிய போராட்டம் தொடர்ந்து பலப்படக் கூடிய முறையில் நமது கோரிக்கைகள் இருக்கிறது. தேசநலன், மக்கள் நலன் சார்ந்திருக்கிறது. எதிரிகளை அம்பலப் படுத்தவும், அன்னியப்படுத்தவும் தேச விடுதலை, மக்கள் விடுதலை வேண்டி நிற்க்கும் போராளிகளை சனநாயக சக்திகளை, மக்களை மேலும் அய்க்கியப் படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

☞ *மூன்றாவது நாட்டின், சர்வதேச நிறுவனத்தின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடப்பது, கண்காணிக்கப்படுவதற்கு அப்பால், எந்த மூன்றாவது நாட்டின் படை களும், சர்வதேச நிறுவனங்களின் (அய்நா அமைதிப்படை) ஆயுதம் தாங்கிய படைகளும் சரி, ஆயுதம் தாங்காத கண்காணிப்பு படைகளும் சரி உள்நாட்டுக்குள் வரக்கூடாது.*

☞ *திம்புக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.*

☞ *சிறீலங்கா அரசு என்ற பெயர் மாற்றப்பட்டு **"இலங்கை அரசு"** என பெயர் மீள சூட்டப்பட வேண்டும். இலங்கையில், சிறீலங்கா — தமிழீழம் என இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் நாட்டின் பாதுகாப்பு (அன்னிய ஆக்கிரமிப்பு எதிராக மட்டும்) நிதி, வெளியுறவுத்துறை தவிர அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், எக்காரணம் கொண்டும் மாநில அரசை கலைக்கும் அதிகாரம், மத்திய அரசுக்கு வழங்கப்படக் கூடாது; மத்திய அரசின் நியமனங்கள், திட்டங்கள் அனைத்தும் மாநில அரசுடன் ஆலோசிக்கப்பட்டு, அனுமதியுடன் அமுல்ப்படுத்தப்பட வேண்டும்.*

☞ *தமிழீழத்தின் கிழக்குப் பகுதியில் முஸ்லீம் மக்களுக்கு **'சுயாட்சி பகுதி'** ஏற்படுத்த வேண்டும். சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில் முஸ்லீம்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். சொந்த வாழ்விடங்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் உரிய நிவாரணங்களுடன் குறித்த கால அளவுக்குள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

☞ சிறீலங்காவில் மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரு 'சுயாட்சிப் பகுதி' ஏற்படுத்த வேண்டும், சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில் மலையகத் தமிழ் மக்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். சிறீலங் காவிலும், தமிழீழத்திலும் உள்ள அனைத்து மலைய மக்களுக்கும் வாக்குரிமை, குடியுரிமை வழங்கப்பட வேண்டும். தமிழீழப் பகுதியில் வாழ்கின்ற, வாழ விரும்புகின்ற மலையக மக்களுக்கும், மலையகத்தை சேர்ந்த போராளிகளுக்கும் நிரந்தரமாக வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும்.

☞ சிறீலங்கா இராணுவம், கடற்படை, ஆகாயப்படை, பொலிசு, முழுப்படையினரும் தமிழீழத்தில் இருந்து வெளியேற வேண்டும். மத்தியரசின் படைகள் எல்லாவற்றிலும் தமிழ்ப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். எல்லா இயக்கங்களின் போராளி களும், தமிழ் மக்களும் (ஆண் – பெண்) படைப் பிரிவுகளில் இணைக்கப்பட வேண்டும். (1983–இல் இருந்த நிலைமைக்கு, படைக் குறைப்பு – முகாம் குறைப்பு செய்வது முகாமுக்குள் முடக்கி வைத்திருப்பது அனுமதிக்க முடியாது.)

☞ தமிழீழப் போராளிகளின் ஆயுதங்கள், சிறீலங்கா அரசிடமோ, மூன்றாவது தரப்பு சர்வதேச கண்காணிப்பு இராஜ தந்திரிகளிடமோ, நேரடியாக – தனியாக எக்காரணம் கொண்டும் ஒப்படைக்கப்பட மாட்டாது. நேரடியாக மாநில, மத்தியரசின் படைகளில் இணைக்கப்படுவதன் மூலம் மட்டும் மாற்றப்படும்.

☞ சிறீலங்கா அரசால் 1972–களுக்குப் பின் தமிழீழப் பகுதியில் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்த கால எல்லைக்குள், அகற்றப்பட வேண்டும்.

☞ சிறீலங்கா அரசு, தமிழ் மக்களை – போராளிகளை அழிப்பதற்காக நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் கடன் சுமையை, தமிழீழ மக்களின் தலையில் மீண்டும் எந்த வகையிலும் சுமத்தப்படக்கூடாது.

☞ பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து தமிழ், முஸ்லீம், மலையகப் போராளிகளும், போராட்டத்தை ஆதரித்தவர்களும் என அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை

www.tamilarangam.net



செய்யப்பட வேண்டும்; பொய்க் குற்றச் சாட்டுக்களின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டவை வாபஸ் பெறப்பட வேண்டும்.

☞ தமிழீழப் பகுதியில் (தரையிலும் – கடலிலும்) சிறிலங்கா அரசு படைகளால், அரசு சார்பு ஆயுதக் குழுக்களால், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள், கண்ணி வெடிகள், பொறி வெடிகள் உள்நாட்டுக் கண்காணிப்பு குழு முன்னிலையில் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அதன் பின்னரே அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் வீடுகளில் குடியமரவும், கடலில் மீன் பிடிக்கவும், விவசாய நிலங்களில் தொழில் செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

☞ தமிழீழத்தின் சிவில் அமைப்பு, பொலிஸ்துறை முழுவதும், மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தமிழீழ மாநில அரசியல் – அதிகாரத்தில், நீதித்துறையில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

☞ தமிழீழ அரசு அமைப்பில், மக்கள் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கும் உரிமை அரசியல் சாசன ரீதியில் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதற்கான குறிப்பான தேர்தல் வடிவங்களும், முறைகளும் கண்டிப்பாக உருவாக்க வேண்டும்.

☞ தமிழீழ அரசு அமைப்பில், மக்களுக்கு தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழீழத்தின் வளர்ச்சி திட்டங்கள் எல்லாம், அப்பகுதி மக்களின் அனுமதியுடன்தான் நிறைவேற்றப்பட வேண்டும். உள்ளூராட்சி அமைப்பு முதல் பாராளுமன்றம் வரையுள்ள அரசியல்வாதிகள் கட்சிகள், இயக்கங் களின் தலைவர்களின், சிவில் அமைப்பின் நீதித்துறை, பாதுகாப்பு துறையின் பொறுப்புமிக்க அதிகாரிகளின் வருமான சொத்து விபரங்கள் வருடம் ஒரு தடவை மக்கள் முன்வைக்கப்பட வேண்டும், பகுதி மக்கள் கேட்ப்பின் எந்நேரத்திலும் முன்வைக்கப்பட வேண்டும்.

☞ உள்நாட்டு – வெளிநாட்டு நிதியில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்களின் (NGO'S) நிதி, வரவு – செலவு, திட்டங்கள், ஆய்வு அறிக்கைகள் எல்லாம் நிறுவனம் இயங்கும் பகுதி மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்பட வேண்டும். வெளிநாடுகளுக்கு – அரசுக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் உள்ளூர் மக்கள் கேட்டுக் கொண்டால் மக்கள் பார்வைக்கு பின்பே அனுப்பப்பட வேண்டும். தமிழீழ அரசும், மத்திய அரசும் தங்களின். சர்வதேச நிறுவனங்களின் வளர்ச்சி திட்டங்

www.tamilarangam.net



களை, அதற்கான நிதிகளை அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட, அரசு அமைப்புக்கள் மூலமே செய்ய வேண்டும், உள்ளூர் அரசு அமைப்பு வடிவங்களை புறந்தள்ளிவிட்டு, அரசு சாரா நிறுவனங்கள் வழியாக செயற்படுத்துவதை கண்டிப்பாக நிறுத்த வேண்டும்.

☞ யுத்தத்தால் இடம் பெயர்ந்து இலங்கைக்குள்ளும், அகதிகளாக இந்தியாவிலும், முகாம்களில் / இடைத்தங்கல் நிலையங்களில் / வீடுகளில் வாழும் தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல குறிப்பிட்ட கால எல்லைக்குள் குடியமர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். வெளி நாட்டு வருமானம் இல்லாதவர்களுக்கு உதவிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

☞ அரசின் வேலை வழங்கும் திணைக் களத்தில் யுத்தத்தில் அங்கவீனமான போராளிகளுக்கும், மக்களுக்கும், யுத்தத்தில் கணவனை, பிள்ளைகளை இழந்த பெண் களுக்கும், குடும்பங்களுக்கும் முன்னுரிமையளிக்க வேண்டும். தாய் – தந்தையை இழந்த சிறுவர்களுக்கும், தனியாக வாழ வேண்டிய நிலையிலுள்ள பெண்களுக்கும், பராமரிக்க யாரும் இல்லாத வயதானவர்கள், கால்கை இழந்தவர்களுக்கும் அரசின் நேரடிப் பராமரிப்பகங்கள் கண்டிப்பாக உருவாக்கப்பட வேண்டும்.

☞ யுத்தத்தால் ஆண் – பெண் விகிதாச்சாரங்களில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் உள்ளது. இதைக் கணக்கில் கொண்டு திருமணச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும்; உலக மக்களை அச்சுறுத்தி வரும் எய்ட்ஸ் நோயும் தமிழீழப் பகுதியில் அதிகரித்து வருகிறது; நோயை தடுப்பதற்கான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துடன், அரசு திருமணத்துக்கு முன்பே மருத்துவச் சான்றிதழ் முறைமையை சட்ட ரீதியாக, பதிவுத் திருமண வழியாக அறிமுகம் செய்ய வேண்டும்.

☞ தமிழீழத்தின் தொழில்நுட்பக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் (அரசு – தனியார்) இலங்கையிலும், இந்தியாவிலும் அகதி முகாம்களிலுள்ள மாணவர் களுக்கும், இளைஞர்கள் – யுவதிகளுக்கும் 50% (அகதி முகாமின் விகிதாச்சாரா முறையில்) இட ஒதுக்கீடு கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

☞ இந்தியாவில் அகதி முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகள், சிறப்பு முகாம் மற்றும் சிறைகளிலுள்ள போராளிகள் மிகக் குறுகிய காலத்தில், தமிழீழப் பகுதி

www.tamilarangam.net



களில் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும். வெளிநாடுகளில் உள்ள குடியுரிமை இல்லாத தமிழீழத்தவர்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நாடு திரும்ப தமிழீழ அரசு ஆவண செய்ய வேண்டும்.

☞ தமிழீழப் பகுதியில் இருந்து வசூலிக்கப்படும் வரிகளில் பெரும் பகுதி தமிழீழ மாநில அரசே பெற்றுக் கொள்ளும்.

☞ தமிழீழ மக்கள் அனைவருக்கும் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு, வீடு அடிப் படை அரசியல் சாசன உரிமையாக்கப்பட வேண்டும். வீடு இல்லாத குடும்பங்களுக்கு வீடும், நிலம் இல்லாதவர்களுக்கு விவசாயக் காணியும் மாநில அரசால் உடனடியாக, கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

☞ நீண்ட யுத்தத்தால், தமிழீழப் பகுதியின் விளை நிலம், காடு, நீர் நிலைகள், காற்று மண்டலம் என அனைத்தும் கடுமையான சுற்றுச் சூழல் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது. அரசின் புதிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மேலும் சுற்றுச் சூழலை மாசு படுத்தாத முறையில் இருக்க வேண்டும்; பகுதி மக்களின் சுற்று சூழல் பதுகாப்புக்கு எதிரான திட்டங்களை அரசு உருவாக்கக் கூடாது, யுத்தத்தால், யுத்தப் பகுதி மக்களின் உடல் ஆரோக்கியம், மனநிலை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அரசு கட்டாய இலவச மருத்துவ சேவை வழங்குவதுடன், சுகாதாரத் துறையில் விசேட பிரிவு ஏற்படுத்தி மக்களின் மனநலம், உடல் நலத்தை சீரமைத்து வளர்க்க முன்னுரிமை யளிக்க வேண்டும்.

☞ தமிழீழத்தில் விவசாயத்தை மட்டும் நம்பி, சிறு விவசாயத்திலும், கூலி உழைப்பிலும் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும், உளவுத் தொழிலை மட்டும் நம்பியுள்ள நிலமற்ற கூலி உழைப்பாளர்களுக்கும், விவசாய உற்பத்திக்கு உகந்த காணிகள் நிலப்பகிர்வு மூலம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். காணி உரிமை மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், நிலப்பங்கீடு அடிப்படையானது. கிராமப் புறத்திலும், நகர்ப்புறத்திலும் நில உச்சவரம்புச் சட்டம், கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

☞ தமிழீழத்தின் உணவுத் தேவையை நிவர்த்திக்கும் முதலீட்டுத் திட்டங்களுக்கு முன்னுரிமையும் மானியமும் அளிக்க வேண்டும்; விவசாயத்திலும், மீன் பிடியிலும் உணவு பதனிடும் தொழிலுக்கும் முக்கியமாக முதலீட்டை திருப்ப வேண்டும்.

www.tamilarangam.net



தமிழீழப் பகுதியின் கரையோர – ஆள்கடல் மீன்பிடிப்பில் தமிழீழ மீனவர்களுக்கே முழு உரிமை இருக்க வேண்டும். அன்னியர்களின் மீன் பிடிப்புக்கு தடை வேண்டும்; கட்டுமர, விசைப்படகு மீன் பிடியாளர்களுக்கு கூடுதலான கடல் மைல் தூரம் ஒதுக்கப்பட வேண்டும்; தமிழீழத்தின் சிறிய, நடுத்தர தொழில்கள் கூட்டுறவு மயமாக்கப்பட வேண்டும் கூட்டுறவு முறை ஊடாக உற்பத்தியில் நவீன தொழில் நுட்பமும், சிறந்த விசேட விநியோக முறையும் ஒழுங்கமைக்கப்படுவது அடிப்படையானது. இதனை அரசே நேரடியாக பொறுப்பு எடுத்து செய்ய வேண்டும்.

☞ தமிழீழ தொழிற்துறை, விவசாயத்துறை, நிதி, சேவைத் துறைகளின் வளர்ச்சிக்கும், புதிய உருவாக்கத்திற்கும் ஆன தொழில் உரிமங்கள், அரசின் ஊக்க உதவிகள். தமிழீழ தேசிய தொழில் முனைவோருக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும்; தமிழீழத்தில் வாழத் தமிழர்களின் (NRT) முதலீடுகள், உள்நாட்டு அத்தியாவசிய பாவனைப் பொருள் உற்பத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டும், விவசாய – மீன்பிடி, தொழிற்துறை உற்பத்தியில், வியாபாரத்தில் உள்நாட்டு நடுத்தர – தேசியத் தொழில் முனைவோரை பாதுகாக்கும், பொருளாதார வணிகக் கொள்கை அடிப்படையானது. பொதுத்துறை (அரசு) நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படக்கூடாது. உரிய முறைகளில் கண்டிப்பாக மறுசீரமைக்கப்பட வேண்டும்.

☞ வெளிநாட்டு முதலீடுகள், கனரகத் தொழிற் துறை உள்கட்டமைப்பு – அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் அனுமதிக்கப்படலாம். வெளிநாட்டு முதலீடுகளின் இலாபத்தில் 75% மீண்டும் உள்நாட்டு உற்பத்திக்கு திரும்ப முதலீடு செய்யப்பட வேண்டும், அன்னிய நேரடி முதலீடுகள் (FDI) கூட்டு முதலீடுகள் (FJI) 25 ஆண்டுகள் திரும்பப் பெற முடியாத சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு தடையான வெளிநாட்டு முதலீடுகள், உலகமயமாக்கல் திறந்த பொருளாதாரக் கொள்கைகள், நவீன மயமாக்கல் என அனுமதிக்கப்படாது. வெளிநாட்டு முதலீட்டை கட்டுப்படுத்தும் முழு உரிமையும் தமிழீழ அரசிடம் இருக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை, வணிகத்தை பாதிக்கும் ஏற்றுமதி இறக்குமதி (EXIM) கொள்கை, அன்னியச் செலவாணியை மட்டும் நோக்கிய கொள்கை அனுமதிக்கப்படக்கூடாது.

☞ அரசுதுறை – தனியார்துறை (சிறுதொழில் – பெருந்தொழில்) என எல்லா உற்பத்தி – வணிக – சேவைத் துறைகளிலும் தமிழீழத் தொழிலாளர்களின் வேலை

www.tamilarangam.net



நேரம் எ மணி நேரம் என சட்ட ரீதியாகப்பட வேண்டும். தொழிலாளர்களின் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை அடிப்படை உரிமையாக்கப்பட வேண்டும். பொலிஸ் மற்றும் படைத்துறைகளில் கூட தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும். போராட்ட முறைகள் மட்டும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். கஅ வயதுக்குட்பட்டவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதை தடை செய்யும் இன்றைய அரசு, குழந்தைத் தொழிலாளர்கள் முறையை கண்டிப்பாக தடை செய்து அமுல் படுத்த வேண்டும்.

☞ தமிழீழ தொலைத் தொடர்பு சாதனத்துறை, மற்றும் ஊடகவியல் துறையிலும் (பத்திரிகை – வான் ஒலி, ஒளி, இணையம்) அன்னிய முதலீடுகளை அரசு கட்டுப் படுத்தும், ஊடகவியல் துறையில், மக்கள் விரோத மூடப்பழக்க வழக்க, சீரழிவுக் கலாச்சார விளம்பரங்கள், படங்கள் – சீரியல்கள், அழகி – அழகன் போட்டிகள் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு போன்ற பந்தய முறைகள் தடை செய்யப்பட வேண்டும். அனைத்து துறைகளிலும் அறிவியல் தொழில்நுட்ப பார்வைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

☞ தமிழீழத்தில் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுவதுடன் உயர் கல்வி வரை கட்டாயக் கல்வி, அரசியல் சாசன முறை ஊடாக அமுல்படுத்த வேண்டும். ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை தமிழ் மொழியே எல்லாக் கல்வி நிறுவனங் களிலும் பயிற்று மொழியாக இருக்க வேண்டும். சிங்களம், ஆங்கிலம் மொழிப் பாடமாக இருக்க வேண்டும். பல்கலைக் கழக கல்விக்கு ஆங்கிலம் பயிற்று மொழியாக தற்காலிகமாக இருக்க வேண்டும், ஆனால் போர்க்கால முயற்சியில் உலக அறிவு அனைத்தையும் தமிழில் படிப்பதற்கான ஏற்பாட்டுக்கு, விசேட துறை கட்டமைக்கப்பட்டு – நிதி ஒதுக்கீடு செய்து மொழி பெயர்ப்பும், வெளியீடும் செய்யப்பட வேண்டும். தமிழீழத்தில் கல்வி நிறுவனங்கள் எல்லாம் மதநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். கல்வி முறையில் இருந்து மதப்பாடம் அகற்றப்பட வேண்டும். கல்வி நிறுவனம் நேரடியாக அரசு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். (மதப்பாடம் மத நிறுவனங்களில் மட்டும் கற்றுக் கொள்ளலாம்.)

☞ தமிழீழ மாநில அரசு, மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும். மத, சாதி நிறுவனங்களுக்கு அரசு எவ்வகையிலும் உதவி செய்யக் கூடாது. அன்னிய நாடுகளில் இருந்து நிதி பெறுவது கட்டாயமாக தடுக்கப்பட வேண்டும். கல்வி – தொழில் – வணிக நிறுவனங்களில் மதச்சடங்குகள், மதப்பழக்க வழக்கங்கள், கோவில்கள் அனுமதிக்கப்படக் கூடாது. மத நிறுவனங்களின் மதமாற்ற நடவடிக்கைகள்

www.tamilarangam.net



*இனிவரும் காலங்களில் தடை செய்யப்பட வேண்டும். மத, சாதி, பிரதேச பெயரிலான அரசியல் கட்சிகள், சமூக சேவை நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும்.*

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் - போரில் தமிழீழ மக்களும், குறிப்பாக தொழிலாளர்களும், விவசாயிகளும், நடுத்தர வர்க்க மக்களும் மிக அதிகளவு தியாகம் செய்து வருகிறார்கள். வாழ்வா - சாவா என அரசு கட்டுப்பாட்டுப் பகுதி / புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், அரசின் பொருளாதார, மருத்துவ தடைகள் மத்தியில், கல்வி - தொழில் நெருக்கடியில் தேசத்தை விட்டு வெளியேறாது. உயிர் பிழைத்து வாழ்கிறார்கள். தமிழீழ விடுதலை யுத்தத்துக்கு நேரடியாக - மறைமுகமாக உயிராதாரமாக விளங்கி வருகிறார்கள். உயிரைக் காப்பதற்காக இலட்சம் மக்கள் இந்தியாவில் அகதிகளாகவுள்ளனர். தமிழீழ உழைக்கும் மக்களின் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை, பேச்சு வார்த்தை — அரசியல்த் தீர்வு ஏற்படுத்த வேண்டும். இக்கடமையை நிறைவேற்றாத இராணுவத் தீர்வோ, அரசியல்த் தீர்வோ பெரும்பான்மை தமிழீழ மக்களுக்கு செய்யும் வரலாற்று துரோகமாகும். மக்களின் தேசத்தின் நலனில் - முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைத்து தமிழீழ அரசியல் சக்திகளும், கட்சிகளும், வெளியீடுகளும் தேசநலன் - மக்கள் நலன் என்ற இலக்கில் இத்தீர்வுப் பொதி திட்டத்தின் அடிப்படையில் கூட்டிணைந்து போராட வருமாறு அறைகூவல் செய்கிறோம்.

*புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே, இக்கோரிக்கைகளை எட்டுத் திக்கும் பரப்புங்கள், மக்களை அணி திரட்டுங்கள். கூட்டுப் போராட்டங்களை நடத்துங்கள்.*

மத்திய குழு
தமிழீழ புதிய சனநாயகக் கட்சி
**N. D. P. T.**

www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2032 (2001) இதழ் 18

*அன்பார்ந்த வாசகர்களே!*

சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமை களினதும் கெடுபிடிகளை தடைகளை தேச எல்லைகளை தாண்டி, அகதி முகாம்களில் கையெழுத்துப் பிரதியாக உருவான **தேசபக்தன்** பின் உருட்டச்சிலும் தொடர்ந்து அச்சுக் கோர்ப்பிலும் தற்போது மின் கணணிப் பதிப்பாகவும் வெளி வந்து கொண்டிருக்கின்றது. உங்களு டைய ஆதரவினாலும், பொருளாதார உதவிகளினாலும் படிப்படியாக உயர்ந்த **தேசபக்தன்** இன்று சர்வதேச இணை வலையிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. எமது தாய்நாட்டின் விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் **தேசபக்தன்** தொடர்ந்தும் உங்கள் ஆதரவையும், விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எதிர் பார்க்கின்றது. தமிழீழ மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள வெளியீட்டாளர்களே! **தேசபக்தனை** விளம்பரப்படுத்தி உதவுங்கள்.

- ஆசிரியர் குழு

"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 15 உரூபா / வெளிநாடு 10 டொலர்

**www.ndpt.org**

**Patriot_editor @ Yahoo.com**

**RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA**

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM (N.D.P.T.)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ சமாதானத்துக்காக
சமாதானமல்ல!
நீதியான சமாதானம் வேண்டும்.

★ ஒரே நேரத்தில் யுத்தமும்
பேச்சு வார்த்தையுமா?
முதலில் யுத்த நிறுத்தம்,
பின் பேச்சு வார்த்தை.

★ போரா – சமாதானமா?
மக்களின் அரசியல்க் கோரிக்கை
தீர்க்கப்படாதவரை மக்களின்
விடுதலை யுத்தம் தொடரும்.

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM**

# N. D. P. T.